# யாதுமாகி...

ஆளுமையின் ஓர் அங்கம்

*முதுகலை & தமிழாய்வுத்துறையின் மாதாந்திர மின்னிதழ்*

**மலர் – 01** **இதழ் – 06** **ஜனவரி– 2024**

திருவள்ளுவர் ஆண்டு
2055 (மார்கழி – தை)



## முதுகலைத் தமிழாய்வுத்துறை

**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)**

**தேசியத் தர மதிப்பீட்டு நான்காம் சுற்றில் 'A++' அங்கீகாரம் பெற்றது** (CGPA 4-க்கு 3.69)

**(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)**

**திருச்சிராப்பள்ளி – 620020**

**தமிழ்நாடு, இந்தியா**

இதழ் : யாதுமாகி

முதன்மையாசிரியர் : முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,
தேர்வு நெறியாளர்,
இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத் தலைவர்.

இணை ஆசிரியர் : முனைவர் வ.முஹம்மது யூனுஸ், இணைப்பேராசிரியர்

துணை ஆசிரியர் : திரு. க.இம்தாதுல்லாஹ், இணைப்பேராசிரியர்

பொறுப்பாசிரியர் : **திரு. வீ.விஜய்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை.

பிரதி : மின்னிதழ்

வெளியீடு : **ஜனவரி – 2024**

---

**இதழாசிரியர் குழு**

*முனைவர் த.செல்வராசு*

*முனைவர் ஷே.நாகூர்கனி*

*திரு. கா.முகமது இஸ்மாயில்*

*முனைவர் மு.சாதிக்பாட்சா*

*முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ்*

*முனைவர் க.சிராஜுதீன்*

*முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு*

*முனைவர் க.இக்பால்*

*முனைவர் மு.ஹ.ஜஹானாரா*

**மாணவ ஒருங்கிணைப்பாளர்கள்**

*ப.அ.முஹம்மது ஆதில் முர்ஷித்*
*ஷா.முஹம்மது அஸ்ரின்*
*ஜோ.ஜார்ஜ் இம்மானுவேல்*
*பி.வீ.தயாநிதி*
*ஷா.முகமது அர்ஷத்*
*உ.பாபர் முகமது இஸ்மாயில் காஜா*
*ஜா. முகமது இலியாஸ்*
*மு.யாசர் அராபத்*
*மு.முகமது இமாதுதீன்*
*ரா.பிரீத்தி*
*ம.தாரணி*
*செ.ராகவி*

---

கண்ணாமூச்சி
ஆட்டமொன்றில்
கலைந்துச் சென்ற
பக்கம் போல்
திக்கற்று
நிமிடங்கள் நீள
நிற்கதியிலும்
நீள்வது நிஜம் தரும்
நிராசையோ
நித்திரையும் நிசப்தமும்
மட்டும்
கைப்பிடித்துக்
கட்டியணைத்து விட
கண்ணெதிரே
காட்சிதரும் புதுஉருவம்
உத்வேகம் உந்திவிட
எழுந்தால் எழ,
நகர்ந்தார் நகர,
நடந்தால் நடப்பதுமாய்
அவ்வுருவம் அங்கிருக்க
தன்னிழல் அதுவென
தன்னிலை
தாபரம் கொண்டிட
"யாதுமாகி"
நிற்கிறது தமிழ்...

– **வீ.விஜய்**
(பொறுப்பாசிரியர்)

## முத்தம்



ரீங்காரப் பாடகனின்
முத்தமிடலில்
உன் மொத்த மடலும்
உயிர் விட்டுப் போனதே!
முத்தமிட்டேன் இதழ்களோடு.

## தென்னை



செடி இன்றி வேர் பிடித்த
நெடு நீள காம்புகளில்
பச்சை நிற மலர்கள்
இதழ் விரித்து
ஆடக்கண்டேன்..!
தென்னந்தோப்பில்.

## வானவில்




மழை நேரம்...
அம்புகளாய் எய்த
மின்னல்களை
மேகங்கள் வானவில்
ஏந்தி தேடுகிறது



**மு. முகமது இமாதுதீன்,**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## உழவர் திருநாள்



தை மாதம் உதிக்க
வெய்யோனை துதிக்க
பொங்கல் ஒலி ஒலிக்க
ஊரெங்கும் செழிக்க
உறவெங்கும் தழைக்க
உயிர்கள் பிழைக்க
உழவர்கள் சிறக்க
காளையைப் பிடிக்க
காளையர்கள் துடிக்க
கைபேசியை மறக்க
உள்ளம் மகிழ
உற்சாகம் பெருக
உழவர் திருநாள்
உன்னதப் பெருநாள்



**வி.ஹரிஷ்ராஜ்,**
**முதுகலை முதலாமாண்டு.**

## தோழி...



என் சிறிய உலகம்
அதில்
எனக்கென
பெரிய உறவாக

அவள்....
என் வாழ்வின்
இன்ப துன்பங்களில்
உடன் இருப்பவள்

அவள்...
வாழ்நாளில் இடிந்து
விழக்கூடாது என
நான் நினைப்பவள்

அவள்...
என் அன்பு தோழி...

**ரா, அபினையா,**
**இளங்கலை முதலாமாண்டு**

**யாதுமாகியின் வாசக அன்பர்களுக்கு**
**இனிய தமிழர் திருநாள்**
**நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்**
**கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்**

## கடைக்கண் பார்வை



கடைத்தெருவில் சென்ற நேரம்
கடைக்கண்ணால் பார்த்த பார்வை
என்கண்ணில் வந்து விழுந்த நினைவு
இன்னும் கூட மறக்கலயே
முன்ன நீயும் சாய்ந்து போக
பின்ன நானும் பாய்ந்து வாரேன்
என்ன நீயும் பாக்காத
ஏழை நெஞ்ச சாய்க்காத

## என்றும் உன் அடிமை

பற்றி பற்றி எரிந்த நெருப்பு
அழிக்காமல் போகாது
சுற்றி சுற்றி திரிந்த நினைவு
உன்னை அணைக்காமல் சாகாது
வற்றி வற்றி இருந்த குளத்தில்
நீர் நிரப்ப வாராயோ!
வந்தால் நீயும் சங்கதி சொல்லு
ஆயுள் முழுவதும்
அடிமையாய் இருப்பேன்

ஷா. முஹம்மது அர்ஷத்
முதுகலை இரண்டாமாண்டு.



## பத்தினி...

கண்ணகி
படி தாண்டாத பத்தினி
என் தாய்
படி தாண்டியும் பத்தினி

உரிக்க உரிக்க ஒன்றுமில்லை
உன்நினைவு வெட்டவெட்ட
வேதனைச் சொல்லி
என்னை கண்ணீரில் ஆழ்த்தியது,
பெயர் வெங்காயம்
உள்ளத்தில் பெரும் காயம்.

வே.சிவா,
இளங்கலை இரண்டாமாண்டு.



## அழுகை

ஆணின் அழுகை
அவன் பிறந்த போது
மிஞ்சிப்போய் இளம்பிராயம் வரை
பின் தெரிவதே
இல்லை

பெண்ணின் அழுகை
அவளும் பிறக்கும் போதும்
தன் இளம்பிராயத்திலும்
பருவ நிலையிலும்
பல்வேறு நிலையிலும்
அழுகையிலே அடையாளமாகிறாள்...

பீ. முகமதுசில்மிசுல்தான்,
முதுகலை இரண்டாமாண்டு



## த(ா)ரணி போற்றும் திருநாள்



உலகம் செழிக்க
உழைப்பைப் பெருக்க
உழுதவனை மதிக்க
உழவு சிறக்க....
பண்பாட்டின் பயனாக
பகலவனைப் பணிந்திட
எருதைப் போற்றிட
ஏறுதழுவுதல் நடந்திட...
நல்வழி அமைந்திட
நன்றியை நினைவுக்கூற
நல்லதொரு இனிய நாள்...!
நன்மை பொங்கும் நன்நாள்
தமிழனைப் போற்றும் நாள்..!
தரணி போற்றும்
தமிழர் திருநாள் ..!

ம.தாரணி,
இளங்கலை இரண்டாமாண்டு



விரைவில்...

**தமிழி — 2024**

**வாகை சூடும் தமிழ்**




## மழையில் நனைய ஆசை...

இந்த உலகத்துல எனக்கு ஆசன்னு பெருசா எதுவும் இல்ல....
ஒன்ன தவிர.... அதுதான் என் மலர்விழி.
எப்படி மலர்ல வாசம் இருக்குமோ, அதே மாதிரி என் சுவாசத்திலே அவள் இருந்தாள்...
ஜாம்பி கடிச்ச உடம்பு மாதிரி, என்னை முழுவதும் அவள் ஆக்ரமித்தாள். அது எனக்கும் பிடித்திருந்தது.



சின்ன வயசுல இருந்தே நான் யாருகிட்டேயும் பேசமாட்டேன். சிரிக்க மாட்டேன். நெருங்கியும் பழக மாட்டேன்... ஆனா அவகிட்ட பேசும்போது மட்டும் உள்ளுக்குள் உற்சாகம் பிரவேசித்தது...
நான் காலேஜ் ஃபர்ஸ்ட் இயர் படிக்கும்போது எனக்கு ஒரு விபத்து நடந்துச்சு.
ஆடி கார்ல வந்தவனுக கண்ண, மூடி திறக்குற நேரத்துல ,மண்ண முத்தமிட வச்சானுங்க...
முத்தமிட்டு இரத்தம் சிந்தும்போது என்ன காப்பாத்த் சொல்லி கூச்சலிட்ட அந்த முகம் இன்னும் என் கண்ண விட்டு போகல...
மூன்று மாத ஓய்வுக்குப் பின் அவளைக் காலேஜ் – ல பார்த்தேன். அவளும் என்னை பார்த்தவுடன் என் அருகில் ஓடி வந்தாள்.
’ இந்தா சாக்லேட் எடுத்துக்கோ... உடம்பு பரவாயில்லையா ’
ம்ம்... இப்ப பரவாயில்ல. அன்னைக்கு ஹெல்ப் பண்ணினதுக்கு ரொம்ப தேங்க்ஸ்..
’ உனக்கு எப்படி தெரியும். அன்னைக்கு நீ மயக்கத்திலேல இருந்த...!’
கண்ண முடுறதுக்கு முன்னாடி தெரிஞ்ச ஒரே முகம்... உன் முகம்....
ஒரு உண்மைய சொல்லவா. ’ இதுவரைக்கும் எந்த பெண்ணை பார்த்ததும் நான் மயங்கியது இல்லை’...
வார்த்தைகள் வாயின் அனுமதியின்றி எகிறிக் குதித்தன. இருவரும் சேர்ந்து சிரித்தோம்.
நல்லவேளை நான் சிரித்ததை என் நண்பர்கள் யாரும் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் உலக அதிசயம் ஒன்று நிகழ்ந்து விட்டதாக கேலி செய்திருப்பர்கள்..
ஒரு பெண்ணைப் பார்த்து பல்லைக் காட்டியது கூட அன்றைக்குத்தான் முதல் தடவை.
’ சேரி நான் வருகிறேன். உன் பேரு என்ன? ’
அடுத்த முறை பார்க்கும்போது சொல்லுறேன்.
’ஏன்?... இப்ப சொன்னா பேரு மோர் ஆயிருமா...’
இல்ல... அடுத்த முறை சந்திக்குறதுக்கு காரணமாக கூட ஆகலாம்...
அவள் புன்சிரிப்புடன் சென்ற காட்சி , இந்த உலகத்தயே வென்ற காட்சி போல தோன்றியது. கிரீட்டிங் கார்டு கடைல போய், ஒரே நேரத்திலே ஒரே கார்ட எடுக்குறது, ஓடிபோய் ஒரே விளக்க அனையாம தடுக்குறது , இப்படி சினிமா– ல வர்ர மாதிரி வாய்ப்புகள் நிஜ வாழ்க்கையில் கிடைக்காதுண்ணு தோணிச்சு. அதனால் சந்திக்குற வாய்ப்ப நானே உருவாக்க திட்டம் தீட்டினேன்.
காலேஜ் விட்டதும் வேகமாக ஓடி பஸ் ஸ்டாண்டில் ஆட்டோக்கு பின்னாடி ஒளிந்திருந்து, அவ எந்த பஸ் – ல ஏறுகின்றாலோ அதே பஸ்ஸில் நானும் ஏறி அவள் வீட்டை கண்டுபிடித்தேன்........ ஏதோ விஞ்ஞானி ஃபார்முலாவ கண்டுபிடிச்ச மாதிரி அவ்வளோ பெருமிதம் உண்டாச்சு.
பஸ்ஸில் அவள் முன் வாசல் வழியாக ஏற , நான் பின்வாசல் வழியாக நுழைய, இருவரும் பஸ்ஸின் நடுப்பகுதியில் சந்திப்போம்... பார்வையால் உள்ளங்கள் பரிமாறின... என் இதயம் அவளிடம் பறிப்போயின....
"கண்ணின் கடைப்பார்வைக் காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம் "
என்ற பாரதிதாசனின் சஞ்சீவி பர்வத்தின் சாரல், சரம் சரமாய், குற்றால சாரல் போல நினைவில் பட்டுத் தெறித்தன...
எப்போதும் அவள் வீடு வரை சென்று வழியனுப்பியப் பின்னரே நான் மேன்சன்

திரும்புவேன்.. அன்றைக்கு ஒருநாள் திடீரென்று திரும்பி என் அருகில் வந்து, ’ இந்த பேப்பர்ல என் ஃபோன் நம்பர் இருக்கு. நைட் 9:00 மணிக்கு ஃபோன் பண்ணு’என்று வேறு எதுவும் பேசாமல், அதுவாக வந்து இதம் தந்து மகிழ்விக்கும் தென்றலாக அவள் சென்றாள்...

அவ குடுத்த பேப்பர்ல உள்ள நம்பர உத்துப்பார்தேன். உம்பர் காட்டயே பரிசாகப் பெற்ற பரணர் மாதிரி எனக்குள்ள அவ்வளவு மகிழ்ச்சி...

ஃபோன் ல பேச ஆரம்பிச்சோம். பேசி பேசி வாய் வலிக்க, சிரிச்சு வயிறு வலிக்க, அவள நினச்சு நினச்சு மனசு துடிக்க , வாழ்க்கைய ரசிச்சு ருசிச்சு வாழத்தொடங்கினேன்...

அவள் என் பேரைக் கேட்கும் போதெல்லாம் நாளை சொல்கிறேன் என்று கூறுவதில் ஒரு சிறிய மகிழ்ச்சி... அவள் பிறந்தநாளைக்கு சொல்லலாம் என்று காத்திருந்தேன்...

ஒருநாள் கடற்கரையில் அவள் என் தோலில் சாய்ந்து வரும்போது அடைமழை இடைவிடாமல் பெய்ய தொடங்கியது..

ஒதுங்க இடம் இருக்கானு நான் பார்க்க, ஓட மனம் இல்லாம அவ என்னை நோக்க, உடனே சட்டென்று அவ ஆடி பாடி அனுபவிக்க, அத தேடி தேடி நான் ரசிக்க, அவள் என் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னாள்,

இந்த மழையாகவே பிறந்திருக்கலாம்.... யாருன்னே தெரியாட்டினாலும் எல்லாருக்கும் மகிழ்ச்சிய தருகிற மழை எனக்கு ரொம்ப பிடிக்கும் "என்று அவள் கூறியதிலிருந்து எனக்கும் மழையைப் பிடிக்க ஆரம்பித்தது...

இந்த உலகத்துலயே ரொம்ப சந்தஷமான ஆளாக நான் இருந்தேன். அந்த சம்பவம் நடக்காத வரை..................

பாம்பன் பாலத்தில் கைக்கோர்த்து நடந்து போய்ட்டு இருந்தோம்.. பாலத்தில் இருந்து பார்த்தால் ஒரு லைட் ஹவுஸ் தெரியும். அவள் என்னிடம் வந்து அந்த லைட் ஹவுஸ் தெரியுற மாதிரி என்னை ஒரு ஃபோட்டோ எடுக்குறியா என்று கேட்க, நானும் போட்டோவை கிளிக் செய்யும் நேரம் பார்த்து , ஒரு வேன் பாலத்தை உடைத்துக்கொண்டு கீழே உள்ள கடலை நோக்கி அவளையும் இழுத்துச் சென்றது. போனை கீழே எறிந்து விட்டு நானும் கீழே கடலில் குதித்தேன். அவளின் கடைசிப் பார்வை என் கண்ணில் பட்டு மறைந்தது... அங்கு இருந்த படகுகள் எங்கள் திசையை நோக்கி வந்தன....

இரண்டு நாட்கள் கழித்து ஹாஸ்பிடலில் கண் விழித்தேன். முகத்திலும் கை, கால்களிலும் பலத்த அடி பட்டிருந்தது. எழுந்தவுடன் அவளின் நினைவு வந்தது..

மலர்............................ என்று ஆக்ரோசமாக கத்தினேன்.

அந்த சத்தத்தில் ஹாஸ்பிட்டல் மொட்டை மாடியில் அமர்ந்திருந்த காக்கை, குருவி எல்லாம் அலறி அடித்துக் கொண்டு பறந்தன..

இரண்டு நர்ஸ்கள் வேகமாக ஓடி வந்து எனக்கு ஊசி போட்டு தூங்க வைத்தனர்.

6 மணி நேரம் கழித்து டாக்டர் என் அருகில் வந்து என்னை ஆசுவாசப்படுத்தி, உங்களுடன் இருந்த பெண்ணைச் சேர்த்து அந்த வேனில் இருந்த 4 பேர் உயிரிழந்தனர். அதில் இரண்டு பேர், 3 வயது குழந்தைகள் ..... மீதமுள்ள 15 பேர் படுகாயங்களோடு இந்த ஹாஸ்பிடலில் உள்ளார்கள்.

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒரு கடினமான சூழல் வரும். எல்லாம் கடந்து போகும்.. உடம்பை வருத்திக்காமல் ரெஸ்ட் எடுங்க. என்று கூறிவிட்டு சென்றார்..

கண்ணீருடன் நொண்டி நொண்டி வேனில் அடிப்பட்டவர்களை பார்க்கச்சென்றேன். எதனால் விபத்து நிகழ்ந்தது என்று விசாரித்தேன். அந்த டிரைவர் எங்களுக்கு தெரியாமல் ஃபுல்லா குடித்து விட்டு வண்டி ஓட்டியதே காரணம் என்றார்கள்..

என் நினைவுகள் பலவாக சுழன்றன. அன்றைக்கும் ஒரு ஆடி காரில் குடித்துவிட்டு வந்தவர்கள் என்னை இடித்து விட்டு சென்றார்கள்... இன்றைக்கும் அதே போன்று ஒரு சம்பவம்.

இந்த குடியினால் எத்தனை மக்கள் பாதிக்கப்படுகின்றனர். எத்தனை கனவுகளைச் சுமந்தோர் மரணிக்கின்றனர். எத்தனை எத்தனை வேதனையை, இறந்தவர்களின் குடும்பங்கள் அடைகின்றனர்...

"இந்தியாவில் ஒரு வருடத்திற்கு 1,50000 மக்கள் விபத்தால் மரணிக்கின்றனர்...

இதில் 1,00000 பேர் மது அருந்திவிட்டு ஓட்டியவர்களே.....

எனக்கு கோபம் தலைக்கு ஏறியது... ஒரு துப்பாக்கியை எடுத்து , மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவர்கள் . அதை வைத்தே கள்ளாக்கட்ட துடிக்கும் அரசியல் வாதிகள், மதுக்கடைகள் அதிகமாக திறக்க ஒப்புதல் அளிக்கும் ,அனைவரையும் சுட்டு வீழ்த்தனும் போன்ற கோபம் பீறிட்டு எழுந்தது...

அந்த டிரைவர் தலையில் காயத்துடன், ICU வில் அனுமதிக்கப்பட்டிருந்தான். அவனைப் பார்க்க சென்றேன்..

என் மலர்விழி என் நினைவில் மீண்டும் மீண்டும் வந்து போனாள்... அவளின் கடைசிப் பார்வை என்னை நிலைக்குலய செய்தது...
அவன் அருகே சென்று அவன் மூக்கில் இருந்த ஆக்சிசன் மாஸ்க்கை கழற்றினேன்... மூச்சு விட முடியாமல் துடித்தான்... வாயால் மூச்சு விட முயன்றான்... என் கையால் அவன் வாயைப் பொத்தினேன்... சிறிது நேரத்தில் அவன் உயிர் உடம்பில் இருந்து பிரிந்தது... கடைசிவரை என் பேர் என்னவென்று தெரியாமலே இறந்த என் மலர்விழி மாதிரி, நான் யாரென்றே தெரியாமல் இறந்துபோனான்..... மீண்டும் ஆக்சிசன் மாஸ்க்கை முகத்தில் மாட்டி ஹாஸ்பிடலை விட்டு வெளியில் வந்தேன்...
தற்கொலை செய்யலாம் என்ற எண்ணம் தோன்றியது.. அவள் முழுவதுமாக நிரம்பியுள்ள இந்த உடலை கொல்வதற்கு மனம் இல்லை...
சாலையை நோக்கி நடக்க தொடங்கினேன்...
மேகம் இருள் சூழ்ந்தது..
அண்ணாந்து மேலே பார்த்தேன்...
வானில் இருந்து ஒரு துளி என் கண்ணில் வந்து விழுந்தது...
"மழையாகவே பிறந்திருக்கலாம்" என்று அவள் கூறியது நினைவிற்கு வந்தது..
கண்ணீர் துளிகளுடன் , சிரிப்பும் கலந்து , இரு கைகளையும் இருபுறமும் நீட்டி அவள் என்னுள் கலந்தது போல் மகிழ்ச்சி அடைந்தேன்...
இன்னும் சிறிது நேரத்தில் மழை நிற்கும்...
வாழ்க்கையை எதிர்நோக்கி காத்திருந்தேன்....
"மழையாய் வரும் என் மலர்விழியையும் சேர்த்துத்தான்"......

ஷா. முஹம்மது அர்ஷத்
முதுகலை இரண்டாமாண்டு.



---

## கல்லுக்குள் ஈரம்...

மேகம் யாரை இழந்தது என்று தெரியவில்லை... கோபமாக மின்னலாகவும், கண்ணீராகவும், மழையாகவும் கொட்டியது... தன் கையில் அப்பி இருந்த கடிகாரத்தைப் பார்த்தான் மணி 11:45 தடவியது..

ஜோசப் "கோபமாக சீக்கிரம் போங்க என குறைத்தான்". சற்று பய்யமாக சார் ட்ராபிக் சார் என்றான் டிரைவர் கிஷோர்.. கோபமாக தன் குரலை உசத்தியவனாய், எனக்கு என்ன கண்ணு தெரியலையா என்ன சிடுசிடுவென பேசினான் ஜோசப்...

டிரைவர் சமாதான கொடியாக சற்று அமைதியைக் காத்தான்.... ஜோசப் சற்று வாட்டசாட்டமான ஆள்.. எதற்கெடுத்தாலும் கோபம்.. யார் என்ன சொன்னாலும் கோபம்.. தான் புடிச்ச முயலுக்கு மூன்று கால் என ஒத்த காலில் நிற்பவன்...

கல்யாணமாகி மூன்று வருடமாகியும் தனக்கு குழந்தை இல்லை என ஒரு சில நிமிடம் யோசித்தவன் கிறிஸ்துமஸிற்கு என்ன கிப்ட் வாங்கலாம் என யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது கார் டோர் தட்டும் சத்தம் கேட்க,
கார் கண்ணாடியை மூன்று இன்ச் மட்டும் இறக்கி சற்று முற்றும் கண்களை உருட்ட,
யாரும் இல்லை...
மீண்டும் கார் டோர் தட்டும் சத்தம் கேட்க,
எரிச்சல் அடைந்த ஜோசப் கார்டோரை வேகமாக திறந்து கொண்டே, இந்த பிச்சைக்காரங்க தொல்லை தாங்க முடியல என்ன முனுமுனுத்தான்...



அம்மா என்று விழுந்தான் அந்த சிறுவன்.. சாப்பிட்டு இரண்டு நாள் ஆச்சு.. சாப்பாடு வாங்கித் தாங்க, என சைகைச் செய்தான்
ஊமைப் போல, என எண்ணி பதினெட்டு ரூபாய் சில்லறைக் காசும் சிகரெட் துண்டும் அவன் தட்டில் விழுந்தது சிறுவன் காரையும் அவனையும் பார்த்துவிட்டு தட்டில் அனாதையாக கிடந்த சிகரெட் துண்டை கையில் எடுத்த சிறுவன், ஜோசப் கையில் நீட்டி, "சிகரெட் நீங்க குடிங்க அது உங்களை பிடிக்கும்" என சொல்லிவிட்டு நகர்ந்தான்...

அந்த சிறுவனை முறைத்துக் கொண்டே வாயில் புகை நடனமாடியது... ட்ராபிக் இப்ப கிளியர் ஆகாது போல என மனதில் நினைத்துக் கொண்டு காரை விட்டு இறங்கிய ஜோசப் அந்த சிறுவனைப் பார்த்துக் கொண்டே டீக்கடைக்கு சென்றான்...

அங்கு சிறுவனின் கையில் ஒரு டீயும் ஒரு பண்ணும் இருக்க அதை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவன் கால் ஊனமாக

இருக்கவே சற்று அதிகம் தான் ஜோசப் மனதில் இரக்க குணம் எட்டிப் பார்த்தது... ஏனென்றால் அவன் மனைவியும் ஊனம்... மனதில் இல்லை என எண்ணி, உன் பேர் என்ன தம்பி என்றான் ஜோசப்.

அந்த சிறுவன் முகத்தில் ஏழ்மையும் பசியும் அலங்காரமாய் இருந்தது... என் பேரு பிச்சைக்காரன் சார்.

உங்க பேரு என்ன என்றான் சிறுவன். அதைக் கேட்ட ஜோசப் மனதில் உள்ள அழுக்கெல்லாம் அந்த மழையில் ஆறாய் ஓடியது. மனம் கரைந்தவனாய், சாரிப்பா என்றான்.

அந்த சிறுவன் சிரித்துக்கொண்டே இதுதான் உங்க பெயரா என்றான்... இருவரும் சிரித்தனர். தனக்கு கல்யாணம் ஆகி மூன்று வருடம் ஆகியும் குழந்தைகள் இல்லை என சிறுவனிடம் சொன்னான் ஜோசப்..

எங்க வீட்டிற்கு வருகிறாயா என்றான்...

நான் வரல என மறுத்தான். கொஞ்ச நேரம் யோசித்து, அந்த சிறுவன் உங்களை என்னவென்று நான் கூப்பிட என்றான்..

ஜோசப் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே சாரிப்பானு கூப்பிடு என சொல்லவும் இருவரும் சிரித்தனர்...

தன் மனைவிக்கு இதைவிட மிகப்பெரிய கிஃப்ட் இந்த உலகத்தில் இல்லை என மனதில் நினைத்து காரில் இருவரும் புறப்பட்டனர்... மனம் நிறைந்தவனாய் ஹேப்பி கிறிஸ்மஸ் ஹேப்பி கிறிஸ்மஸ் என்றான் சிறுவன்...

இருவர் முகத்திலும் மகிழ்ச்சி ஒட்டிக்கொண்டது...

வீடு வந்ததும் அந்த வீட்டில் ஜோசப் குழந்தைகள் காப்பகம் என எழுதி இருந்தது...அந்த காப்பகத்தில் சில நட்சத்திரங்கள் சுவரிலும் சில நட்சத்திரங்கள் தரையிலும் விளையாடிக் கொண்டிருந்தன....

அ.ரியாஸ் முகமது,

முதுகலை இரண்டாமாண்டு.



---

## புகை வண்டியா?

## புதையல் வண்டியா? (தொடர்கதை)

**யாதுமாகி – திசம்பர் 2023 மாத இதழில் வெளியான கதையின் தொடர்ச்சி...**

வாங்கய்யா காவல் நிலையத்துக்கு என்று அழைத்துக் கொண்டிருக்கும் போது டமால் என்று சத்தம் மறுபடியும் டமால் டமால் என்று சத்தம் ஒலித்துக் கொண்டே இருக்க எனக்கு முன்னால் இருக்கும் பலர் முணுமுணுக்க நானும் நிமிர்ந்து நிமிர்ந்து என்னால் முடிந்த அளவு எட்டிக் கொண்டு பார்த்தேன். அங்கிருந்த ஒருவர் மது போதை அதிகரித்த காரணத்தினால் அங்கிருந்த பெட்டியின் மேல் ஓங்கி குத்தும் சத்தம் அது. அங்கிருந்த எல்லாரும் அதனைப் பார்த்துவிட்டு சிலர் சிரிக்க ஆரம்பித்தனர். சிலர் அவரை திட்டிக் கொண்டிருந்தனர்.

எனக்கு மறுபடியும் ஒரு நிகழ்வு நினைவில் வரத் தொடங்கியது. நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது இரண்டாவது மற்றும் மூன்றாவது பாட வேளையில் உடற்கல்வி வகுப்பு என்ற காரணத்தினால் பள்ளியின் மைதானத்தில் நானும் என்னுடைய நண்பர்களும் விளையாடிக் கொண்டிருந்தோம்.

அப்போது ஒரு மது போதையில் இருந்த ஒருவர் உள்ளே நுழைந்தார். அதனைப் பார்த்த உடற்கல்வி ஆசிரியர் விரைவாக அவனை நோக்கி வந்தார். நாங்களும் அவனை கண்டு பயத்தில் பின் நகர்ந்தோம். ஆசிரியர் அவனைத் திட்டி வெளியே போ என்று சொல்ல சொல்ல அவன் உள்ளே நுழைய ஆரம்பித்தான். ஒரு கட்டத்தில் ஆசிரியருக்கு கோபம் அதிகரிக்க இன்னும் சில வார்த்தைகளைச் சொல்லி திட்டினான்.

அவன் கோபத்தில் 'செஸ்ஸா ஜூஸா சாரா மோரா' என்று சொன்னான் அங்கு விளையாடிக் கொண்டு இருந்த எல்லாரும் சிரித்து விட்டார்கள் ஆசிரியர் சிரிப்பதா மிரட்டுவதா என்று தெரியாமல் மெதுவாக திரும்பி 'ஷ்....' என்றார். நாங்களும் சிரிப்பதை நிறுத்திவிட்டு அமைதியாகி விட்டோம். பிறகு அவனை ஆசிரியர் வெளியே போடா என்று இன்னும் சத்தமாக சொல்ல ஒருவன் மெதுவாக ஓடி வந்தான்.

சார் இவன் போதையில் உளறுகிறான் சார் மன்னிச்சுக்கோங்க என்று ஒருவன் சொல்லிவிட்டு அவனை சட்டையைப் பிடித்து தர தர என்று இழுத்துச் சென்று விட்டான் என்ற சிந்தனை ஓடிக் கொண்டிருக்கும் போது மறுபடியும் டம் டம் என்று சத்தம் கேட்டது. சிந்தனையை நிறுத்திவிட்டு மறுபடியும் எட்டிப் பார்த்தேன். பக்கத்தில் இருந்த ஒரு பெண்மணியை அடித்து விட்டான் அருகில் இருந்த பலர் அவனை தரத் தர என்று இழுத்து அடிக்க ஆரம்பித்தார்கள்.

பக்கத்தில் இருந்த மற்றொரு சிலர் பாவமாக அவனை எல்லாரும் இப்படி அடிக்கிறீர்களே என்று கூச்சலிட புகைவண்டியும் மெதுவாக மணப்பாறை ரயில் நிலையத்திற்கு வந்து நின்றது.

ஒரு சிலர் இங்கு இறங்க வேண்டிய காரணத்தினால் அதை விட்டுவிட்டு வேகமாக பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே இறங்க தொடங்கினார்கள். நான், நமக்கென்ன நாம அடுத்த ஸ்டாப்புல இறங்கனும் என்று அமைதியாக இருந்து விட்டேன்.



மெதுவாக இரண்டு கழிப்பறைக்கும் இடையில் இருந்த நான் நடைமேடையைப் பார்த்தேன். மக்கள் நடந்து சென்று இருந்தார்கள் சிலர் ஏறிக் கொண்டிருந்தார்கள் இதனை பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் புகைவண்டி கிளம்புவதற்கு சத்தம் ஒலித்தது.

அப்போது என் காலில் ஏதோ உரசுவது போல எனக்கு எண்ணம் குனிந்து கீழே காலை பார்த்தேன் என் காலுக்குக் கீழே இருந்த அந்த மது போதையில் உறங்கிக் கொண்டிருந்தவர் புரண்டு படுத்தது என் காலில் மோதியது.

அப்பொழுது சற்று கூட்டம் குறைந்தது. புகைவண்டிக்குள் சிலர் மணப்பாறை ஸ்பெஷல் "முறுக்கு சார்...."

"மணப்பாறை ஸ்பெஷல் முறுக்கு சார்..." என்று நகர்ந்து வரும் சத்தம் கேட்டது. அதனைக் கேட்ட சிலர் இங்கு வாங்க பாக்கெட்டு எவ்வளவு என்று கேட்டார்கள். அதில் சிலர் என்ன இவ்வளவு விலை சொல்றீங்க. கொஞ்சம் குறைச்சு சொல்றது என்று கூட சொன்னார்கள். ஐயா நாங்களே வந்து ஏதோ வயிற்றுப் பொழப்புக்காக வித்துட்டு இருக்கோம். எங்களுக்கு கிடைக்கிறது இரண்டு ரூபாய் தான் லாபம் அதுல இங்க சிலருக்கு நாங்க கமிஷன் கொடுக்கணும் சிலருக்கு இனமாக கொடுக்கணும். எப்படியா விலை கம்மியா கொடுக்க முடியும்.

இதே ரயிலுக்குள்ள கேண்டின்ல விக்கிறதை மட்டும் சொல்ற காசுக்கு நீங்க வாங்குறீங்க என்னைப் போல சிறு வியாபாரிகள் வந்தா மட்டும் விலை கம்மியா குடுன்னு கேக்குறீங்களே! நியாயமா ஐயா! என்று சொல்லும் பொழுது வயது முதிர்ந்த ஒருவர் என்ன நீ ஓவரா பேசுற எனக்கு முறுக்கும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம் போயா என்று சொல்லியதும் அந்த முறுக்கு விற்பவர் ஐயா ஐயா என்று சொல்லிக் கெஞ்சி, சரிங்க ஐயா நீங்க கேட்டதற்காக ஒரு ரூபாய் வேணா கம்மியா குடுங்க. என்னய்யா ஓவரா பேசினால் இப்ப என்னய்யா கெஞ்சுற ஐயா நான் நாலு ரூபாய் சம்பாதிச்சா தான் என் குடும்பம் சந்தோசமா சாப்பிட முடியும் என்று தன் நிலைமையைக் கூறிக்கொண்டிருக்கும் போது,

ஒருவர் ஐயா நீங்க ஏங்க ஐயா இந்த ஆள் கிட்ட கெஞ்சனும் வாங்கய்யா நான் வாங்கிக்கிறேன் எவ்வளவு ஐயா என்றதும் அந்த விற்பவர் இந்த பாக்கெட் இருபது ரூபாய் சிறிய பாக்கெட் பத்து ரூபாய் என்று சொல்லியதும் சிறிய பாக்கெட்டில் 5 பாக்கெட்டும் பெரிய பாக்கெட்டில் ஐந்து பாக்கெட்டும் வாங்கிவிட்டு எவ்வளவு அய்யா என்றார். ஐயா சிறிய பாக்கெட் 5க்கு 50 ரூபாய் பெரிய பாக்கெட் ஐந்து பாக்கெட்டுக்கு நூறு ரூபாய் ஐயா ஒரு பத்து ரூபாய் வேணா கம்மி பண்ணிக்கோங்க. அந்த வாங்கியவர் இல்லை இல்லை நீங்கள் உழைத்து தான் சம்பாதிக்கிறீர்கள். நான் எவ்வளவு என்று தான் கேட்டேன்.

கம்மி பண்ணுங்க என்று கேட்கவில்லை. இந்தாங்க மொத்தம் நூற்றி ஐம்பது ரூபாயா இந்தாங்க இருநூறு ரூபாய் வெச்சுக்கோங்க என்று சொல்லி அவர் பாக்கெட்டில் வைத்து விட்டார் அதனை சுற்றிப் பார்த்து இருந்த சிலர் எனக்கு ஒரு பாக்கெட் குடுங்க எனக்கு ரெண்டு பாக்கெட் குடுங்க என்று பலர் கேட்க. அவர் கூடையிலிருந்து அனைத்தும் விற்று விட்டது அவர் முதலில் வாங்கியவரை பார்த்து விட்டு கையெடுத்து கும்பிட்டு விட்டு பேனா மறக்க மாட்டேன் என்று சொல்லி விட்டு மெதுவாக நகர்ந்து சென்று விட்டார்.

இன்றும் சில நேரத்தில் திருச்சிராப்பள்ளி வந்து சேரும் என்று பலர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது புகை வண்டி மெதுவாக வேகம் குறைந்தது. திருச்சிக்குள் வந்தது. ஆனால் புகைவண்டி நிலையத்திற்குள் வரவில்லை. அப்படி நிலையத்திற்கு முன் சில கிலோமீட்டர்களுக்கு முன் நின்று விட்டது. வண்டிக்குள் இருந்து கொண்டிருந்த சில வெளியே பார்த்தார்கள். அப்பொழுது எதிர் திசையில் ஒரு புகைவண்டி வருவதை கவனித்தார்கள். அருகில் இருந்த சிலர் என்னப்பா வண்டி நிக்குது என்று கேட்க வேற ஒரு ட்ரெயின் கிராஸ் ஆகிறது போல அதான் நிக்குது என்று சொல்லி தலையை உள்ளே எடுத்தார். புகைவண்டி சர்... என்று ஒவ்வொரு பெட்டியாக கடந்து சென்றது.

தொடரும்....

உ.பாபர் முகமது
இஸ்மாயில் காஜா,
முதுகலை இரண்டாமாண்டு.



# கட்டுரைக்கனி

## பண்படுத்தும் பண்பாடு

**“தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு”** என்று தமிழரை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர்.

வேறெந்த இனத்திற்கும், மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும், தமிழருக்கும் உண்டு என்றால் மிகையாகாது. காரணம் மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை விட எப்படி வாழக்கூடாது என்று வாழ்வியலை கற்றுக் கொடுத்த தமிழரின் பண்பாடு அடிச்சுவடிகள் இன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்து இருக்கிறது என்றால் உயர்ந்த சிந்தனைகளையும் உயர்வான எண்ணங்களையும் சமூகம் என்னும் மேற்பரப்பில் விதைத்துச்சென்றிருக்கிறது என்று தானே அர்த்தம்.

நாடாண்ட மன்னன் முதல் குடிசை வாழும் சாதாரண குடிமகன் வரை குலம் காக்கும் பண்பாட்டை கட்டிக் காத்து பார் போற்ற வாழ்ந்த இனம் தமிழினம் மட்டுமே. இது வரலாற்றுப்பதிவு. இலக்கியங்கள் தொடங்கி இன்றைய இணையம் வரைக்கும் தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலை தளத்திலும் பின் தொடர்ந்து வருகிறது.

பாவாணர் கூறுவதுபோல, பண்பாடு மற்றும் நாகரிகம் என்பது திருந்திய ஒழுக்கம், முன்னது “அகக்கூறு” பின்னது “புறக்கூறு” இவ்விரண்டிலும் மெச்சத்தக்கது.

பல சந்தர்ப்பங்களில் தமிழர் பண்பாடு இது. தமிழர் பண்பாடு இதுவல்ல என்று தெளிவாக வரையறுப்பது கடினமாகினும் ஓர் அறிவுசார் மதிப்பீடு செய்ய முடியும். எடுத்துக்காட்டாக யூத சமயமோ, சீக்கிய சமயமோ தமிழர் பண்பாட்டு வட்டத்துக்குள் வரமாட்டார்.

மொழியையும், பண்பாட்டையும், தமிழர்கள் மதிக்கின்றனர். மனிதனுக்கு மனிதன் மட்டும் ஈகை அல்ல. படர்ந்து செல்லும் செடிகளுக்கும் கூட உற்றுழி உதவி செய்த தமிழ்ப்பண்பாட்டை உலக அரங்கில் உயர்ந்த இடத்தில் எடுத்துச் சென்றது தமிழினமே.

விருந்தோம்பல்” என்னும் சொல்லுக்கு அடைக்கலம் கொடுத்து நம் பண்பாடு ஏடுகளிலும், பள்ளிப்புத்தகங்களிலும், ஒளிர்ந்து காணப்படுகிறது. தன்னிகரில்லா பல பெருமைகளையும் மொழியையும், நம் பண்பாட்டையும் காப்பாற்றும் பொறுப்பும், கடமையும், நம் தலைமுறையினருக்கு உள்ளது என்பதனை மறந்துவிடாதீர்கள்.

தமிழ்! தமிழ்! எனினும் பாரதியின் வாக்கிற்கிணங்க தமிழ் மொழியினையும், தமிழர் பண்பாட்டையும் காப்பது நம் கடமையாகும்.

**வாழ்க தமிழ்... வளர்க தமிழ்...**



க.பாலஸ்ரீ ,
முதுகலை இரண்டாமாண்டு.

---

## தகைசால் தமிழர்

தமிழரின் பெருமைக்குக் காரணம் வீரம், ஈகை, விருந்தோம்பல், கலாச்சாரம், பண்பாடு, பண்டிகைகள், கலைகள் போன்றவை ஆகும்.

தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல். வீட்டிற்கு வரும் உறவினர்களை முகம் மலர்ந்து அன்போடு வரவேற்கிறோம். உறவினர்களுக்கு உணவளித்து வழி அனுப்பும் வாழ்வியலை தருகிறது தமிழரின் பண்பாடு.

வாரி வழங்கும் வள்ளல்கள் வாழ்ந்த, வரலாற்றை பாதுகாத்து வருகிறோம். மயிலுக்குப் போர்வை அளித்த பேகன், செடி, கொடிகளுக்குத் தன் தேரினைத் தந்த பாரி, நீண்ட நாள் உயிர் வாழும் நெல்லிக்கனியை அதியமானுக்குக் கொடுத்து சென்றார். ஔவை பெருந்தகை, நாடு, நகரம் என அனைத்தையும் அள்ளி அள்ளி கொடுத்த ஈகை எனும் ஈர மனதினை கொண்டவர்கள் தமிழர்கள்.

வீரத்திலும் பண்பாட்டை விதைத்து சென்றவன் தமிழன் ஆவான். எதிர் நாட்டுப் படையினைத் தாக்கும்போது கூட ஈரமும் இறக்கமும் கொண்டவர் தமிழர். புறமுதுகிட்டு ஓடுவதும், புறமுதுகில் அம்பு பட்டு வீழ்ந்து போவதும் அவமானம் எனக் கருதிய பரம்பரை நம் பரம்பரை.

போரில் இறந்த மகனின் செய்தி கேட்டும் அவன் இறந்ததை நினைத்துக் கவலைப் படாமல் போரில் நெஞ்சிலே அம்பு பட்டு வீரமரணம் அடைய வேண்டும். இல்லையெனில் அவன் பால் உண்ட மார்பகங்களை அறுத்தெறிவேன் எனத் தாம் சபதம் செய்கிறாள். வீரமங்கை வாழ்ந்த பூமி இது. பிள்ளை பிறக்கும்போதே அன்னை வீரத்தையும் சேர்த்து ஊட்டுகிறாள்.

*இப்பெருமை தமிழ் இனத்துக்கு மட்டுமே உண்டு. தமிழர் கலாச்சாரத்தில் இயற்கை மற்றும் முன்னோர்களை கடவுளாகவே வழிபடும் முறை காணப்படுகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டுடன் இல்லற வாழ்க்கைமுறை கடைபிடிக்கப்படுகின்றது.*

*பண்பாடு எனப்படுவது, பயிர் விளைகின்ற நிலத்தை உழுது பயன்படுத்துவது போல மக்கள் தம் வாழ்க்கையினை நெறிப்படுத்துவதே பண்பாடாகும். அறத்தின் வழி வாழுதல் தமிழர் பண்பாடாகும்.*

*பண்டிகைகள் நம் பண்பாடு கலாச்சாரத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது. நமது சமுதாயத்தில் பல பண்டிகைகள் காணப்பட்டாலும் தமிழருக்கு என உள்ள முக்கிய பண்டிகை தைத்திருநாள் ஆகும்.*

*இப்படி தமிழர்கள் விருந்தோம்பலில் ஆரம்பித்து வீரம், தாயுள்ளம், பண்டிகை, பாரம்பரியம், கலாச்சாரம் என அனைத்து தளங்களிலும் நமது தமிழர் பெருமைகளைப் பார்க்க முடிகிறது.*

***தமிழரின் கலைகளைப் பாதுகாப்போம்!***
***தமிழரின் பெருமைகளைப் போற்றுவோம்***



**பொ.ஸ்ரீபாரதி,**
**இளங்கலை இரண்டாமாண்டு.**



## தெரிந்து கொள்வோம்






22.01.2024 (திங்கட்கிழமை) தமிழாய்வுத்துறை நடத்திய "தமிழர் திருநாள் பட்டிமன்றம்" நிகழ்வு

# சித்திரம் பேசுதடி





செ.ராகவி,
இளங்கலை முதலாமாண்டு.



இர்பானது ஸஹ்தியா,
இளங்கலை இரண்டாமாண்டு.



அ.அஜ்முனிஷா,
இளங்கலை இரண்டாமாண்டு.



மு.கிருத்திகா,
இளங்கலை முதலாமாண்டு.



த.மோகனதாரணி,
இளங்கலை இரண்டாமாண்டு.



ரா.பிருந்தா,
இளங்கலை முதலாமாண்டு.